[2006 ஜனவரி 17

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 8, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

8—

ஊக்கத் தொகை

***20015—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொள்பவருக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் மகளிருக்கு, மைய அரசு ஊக்கத் தொகையாக ரூ.115/–ம், அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் ஆண்களுக்கு ரூ.135/–ம் வழங்கி வந்தது. கடந்த 1–6–2001 முதல், இத்தொகைகள் முறையே ரூ.200/– மற்றும் ரூ.175/– என உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளக்கூடிய பெண்களுக்கு, மத்திய அரசு ரூ.300/– என்று முன்பு வழங்கிக் கொண்டிருந்தார்கள். அதிலே, அந்தந்த மருத்துவமனையிலே, நிர்வாகச் செலவுக்காக ரூ.150/–ஐ எடுத்துக்கொள்வதாகவும், அதேபோல், ஆண்களுக்கு ரூ.200/– என்று முன்பு வழங்கப்பட்டு வந்தது; அதிலே, ரூ.150/–ஐ கருத்தடை செய்துகொள்ளக்கூடிய ஆண்களுக்குக் கொடுத்துவிட்டு, மீதி ரூ.50/–ஐ நிர்வாகச் செலவுக்காக அந்த மருத்துவமனை எடுத்துக்கொள்வதாகவும் அறிகிறேன். மத்திய அரசாங்கம் அளிக்கக்கூடிய முழுத் தொகையையும் கருத்தடை செய்துகொள்ளக்கூடிய ஆண்களுக்கும், பெண்களுக்கும் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம்தான் இதற்கான ஒரு வரையறையை வைத்திருக்கிறது. பொதுவாக எடுத்துக்கொண்டால்,

2006 ஜனவரி 17]

பெண்கள் அறுவை சிகிச்சை செய்துகொள்வதாக எடுத்துக் கொண்டால், பயனாளிகளுக்கு ரூ.85/–ம், சாப்பாட்டிற்கு ரூ.35/–ம், போக்குவரத்திற்கு ரூ.20/–ம், அதுபோக, மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.15/–ம், ஆக மொத்தம் ரூ.155/– ஆக இருந்தது. இப்போது அதை 1–6–2001–ல் உயர்த்தி, பயனாளிகளுக்கு ரூ.200/–ம், மருந்துக்கு ரூ.90/–ம், இதர வகைக்காக ரூ.10/–ம், ஆக மொத்தம் ரூ.300/– ஆகக் கொடுக்கப்படுகிறது. அதேபோல, அந்த அறுவை சிகிச்சையிலே, பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவருக்கு ரூ.5/–ம், மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவருக்கு ரூ.3/–ம், மருத்துவம் சாராப் பணியாளருக்கு ரூ.2/–ம், மருந்துக்கு ரூ.40/–ம், இதர வகையான செலவுகளுக்கு ரூ.10/–ம், அதேபோல, மாநில அரசின் சார்பாக, பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்களுக்கு ரூ.5/–ம், மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவருக்கு ரூ.1/–ம், மருத்துவம் சாராப் பணியாளருக்கு ரூ.3/–ம், நிர்வாகப் பணியாளருக்கு ரூ.2/–ம், உதவி மருத்துவருக்கு ரூ.4/–ம், ஆக மொத்தம் ரூ.300/– வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது மத்திய அரசினுடைய வரையறைத் திட்டம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

9—

ஊட்டி டீ

*** 29766—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், குன்னூர் INDCOSERVE மூலம் தயாரிக்கப்படும் ஊட்டி "டீ" தரம் உயர்த்தப்படுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வரும் INDCOSERVE என்ற தொழில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் இணையம், குறைந்த விலையில் தரமான தேயிலைத் தூளைப் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள், 28–8–2001 அன்று புதிய தேயிலைத் தூளை அறிமுகம்